திரு. கு.வ. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டப் பேரவைத் தொகுதி நான்கு ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய பகுதியாகும். அங்கு எந்தவொரு தொழிற்சாலையும் இல்லை. அந்தப் பகுதி மக்கள் முழுக்க, முழுக்க விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பையுமே பிரதானத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். விளாத்திகுளம், சட்டப் பேரவைத் தொகுதியினுடைய தலைமை இடமாகும். அந்த இடத்தில் பால் பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசியோடு அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விளாத்திகுளம் தொகுதியிலே, பால் கொள்முதல் பெருகுகின்றபொழுது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 413, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

413—

பழங்கள் பதப்படுத்தும் நிலையம்

***17198—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) சோழவந்தான் தொகுதி, பாலமேடு பகுதியில் பழங்கள் பதப்படுத்தும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அன்பு, அறிவு, ஆற்றல், உறுதி, உள்ளத் தூய்மை, மனிதநேயம் ஆகிய அருங்குணங்களோடு அஷ்டாவதானியாக அரசாட்சி புரிய பொன்னகை துறந்து, புன்னகைப் பேரரசியின் நல்லாட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, பாலமேடு பகுதியில் பழங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை துறையின் மூலமாக ஆய்வு செய்தபின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மூ.வீ. கருப்பையா அவர்கள்.

முற்பகல் 10-45

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. மூ.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ச் சங்கம் கண்ட மதுரையில் தமிழர் தம் உரிமைக்காக நீதிப் போராட்டம் நடத்தி, தமிழர்களுடைய ஜீவாதார உரிமையை எந்த நிலையிலும் விட்டுக் கொடுக்கமாட்டேன் என வீரத் தாயாக, தெய்வமாக வெற்றி கண்ட நம் தமிழர்குல தெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) தொட்டில் குழந்தைத் திட்டம் தந்த தெய்வம், மழைநீர் சேகரிப்புத் திட்டம் தந்த ஜீவநதி தெய்வம், காவேரி நடுவர் மன்ற ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட பாடுபட்ட தெய்வம், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்துவதற்கு நீதிப் போராட்டம் நடத்திய தெய்வம், ஏழையெளியோர் ஏற்றம் பெற எந்நாளும் உழைக்கும், இந்தியத்

[2014 ஆகஸ்ட் 12

திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பாலமேடு பகுதியில், கோடையில் இயற்கை கொடுத்த கொடை மாம்பழம்; சர்க்கரை நோய்க்கு அருமருந்து கொய்யா; 'சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' என்று கேட்டு, அவ்வைக்கு அறிவூட்டிய நாவல் பழம்; உடல் ஆரோக்கியத்திற்கு உறுதுணையாக இருக்கும் பப்பாளி, சப்போட்டா, நெல்லிக்கனி ஆகியவை அதிகமாக உற்பத்தியாகின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழல் ஊதும் குயிலின் குரலோ பாடகனாக்கும்; வாணியின் வீணையோ வித்தகனாக்கும்; சிங்கத்தின் சீற்றமோ சீர்மிகு வெற்றியாளனாக்கும்; பால் குருதி ஈட்டும் பகலோ பண்பாளனாக்கும்; ஆழி, ஆம்பல் மலரோ அணிபவரை அழகனாக்கும்; அம்மா! தலைமுறைக்கும் தலைமை ஏற்கும் உங்களின் தலைமை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தலைமுறையையே காக்கும் என தலைதாழ்ந்து வணங்கித் தெரிவித்துக்கொள்கிறேன். 'தாயிருக்க பிள்ளை தளருமோ தரணியில், நீவீர் இருக்க நாம் தளர்தல் நீதியோ' என எம் தாய் நீங்கள் இருக்க, நாங்கள் என்றென்றும் தளராமல் தலைநிமிர்ந்தே நிற்போம் என்று தலைவணங்கித் தெரிவித்து, வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாழை, மா, கொய்யா போன்ற பழப் பயிர்கள் 4,600 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்படுகின்றன. இதில் பதப்படுத்தத்தக்க வகையில் உள்ள கொய்யா மற்றும் மா ஆகிய பயிர்கள் சுமார் 3,300 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 25 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. மத்திய அரசின் உணவுப்

2014 ஆகஸ்ட் 12]

பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் மாநில முகமை நிறுவனமாக, தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக வரித் துறை செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், விவசாயிகள், விவசாயக் குழுக்கள், பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், அரசுசாரா நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், தனியார் துறை, தொழில் முனைவோர் குழுக்கள் மற்றும் கூட்டு நிறுவனங்கள், உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலை தொடங்க முன்வந்தால், திட்ட மதிப்பீட்டில் 25 சதவிகிதம், அதிகபட்சமாக 50 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கிடவும், தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத் திட்டத்தில், ஊரக முதன்மைப் பதப்படுத்தும் மையம் அமைக்க, திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதம், அதிகபட்சமாக 2.50 கோடி ரூபாய் வரை மானியமாக வழங்கிடவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு, மாமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை எடுத்துச்சென்று, துறையின் மூலமாக உரிய ஆய்வினை மேற்கொண்டு, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, மாமன்ற உறுப்பினரின் கோரிக்கை ஆவன செய்யப்படும் என்பதை மாமன்ற உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 414, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பவுன்ராஜ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

414—

ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

***7948—திரு. க. பவுன்ராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—